# துருக்கி வெளியுறவு அமைச்சர் இந்தியாவிற்கு வருகை (ஆகஸ்ட் 18-20, 2016)

**ஆகஸ்ட் 18, 2016**

மதிப்பிற்குரிய திரு மெவ்லுட் கவுசொக்லு, துருக்கி வெளியுறவு அமைச்சர் ஆகஸ்ட் 18-20, 2016 இல் இந்தியாவிற்கு வருகை செய்ய உள்ளார். கடந்த ஆண்டு இந்தியாவில் ஒரு போக்குவரத்து நிறுத்தலின் போது இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்தித்தாலும், இது அமைச்சர் கவசொக்லுவின் இந்தியாவிற்கான முதல் உத்தியோகபூர்வ பயணமாக இருக்கும்.

இந்த விஜயத்தின் போது, மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் ஆகஸ்ட் 19 ம் தேதி அன்று அமைச்சர் கவசக்லுவுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். இருதரப்பு உறவுகள் அத்துடன் பலதரப்பு மற்றும் பிரதேச பிரச்சினைகள் குறித்த முழு வரம்பினை இந்த பேச்சுக்களில் விவாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. மேலும், அமைச்சர் கவசொக்லு ஆகஸ்ட் 19 அன்று, மாண்புமிகு இந்திய துணை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அவர் ஆகஸ்ட் 20 அன்று அதிகாரப்பூர்வமாக துருக்கிய தூதரக கட்டிடத்தை திறந்து வைக்க ஹைதெராபாத்துக்கு வருகை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் துருக்கி, ஆழமாக வேரூன்றிய உறவுகளை அனுபவித்து வருகின்றன. நமது இருதரப்பு உறவுகள், நீடித்த மற்றும் வழக்கமான உயர் மட்ட பரிமாற்றங்கள் மூலம் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. இருதரப்பு வர்த்தகம் மேலும் அதிகரித்து வருகிறது மற்றும் கடந்த ஆண்டு அமெரிக்க $6.3 பில்லியனை தொட்டது.

துருக்கிய வெளியுறவு அமைச்சரின் இந்த விஜயம் நமது இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் என்று நாம் நம்புகிறோம்.

**புது டில்லி,**

**ஆகஸ்ட் 18, 2016**